முதன்மை சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்.

அ.வ. எண். 141/2017

| | | |
|---|---|---|
| வாதி தரப்பு சாட்சி | .. | 1 |
| பெயர் | .. | எல்லம்மாள் |
| தகப்பனார் / கணவர் பெயர் | .. | வெங்கடேசன் |
| வயது | .. | 55 |
| தொழில் | .. | |
| கிராமம் | .. | ஆலத்தூர் |
| தாலுக்கா | .. | செய்யாறு |

2025 ஆம் ஆண்டு ஜீலை மாதம் 22ஆம் நாள் செவ்வாய்கிழமை திரு. நா. சுரேஷ், எம்.எல்., முதன்மை சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

முதல் விசாரணை தொடர்ச்சி

வழக்கில் வாதி. எனது சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் என்னால் சொல்லப்பட்டது. நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையதுதான். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். இலவச மனவாரி பட்டா (நீதிமன்ற சான்று) நகல் வா.த.சா.ஆ.6, வீட்டுவரி ரசீது (நீதிமன்ற சான்று) நகல்வா.த.சா.ஆ.7, குடிநீர் ரசீது (நீதிமன்ற சான்று) நகல் வா.த.சா.ஆ.8.

**குறுக்கு விசாரணை**

நான் எவ்வளவு நாளாக சென்னையில் இருக்கிறேன் என்றால் இல்லை நான் ஆலத்தூரில் வசித்து வருகிறேன். நான் ஊரில் இல்லாததால் தான் வருவாய்துறையில் மறுசீரமைப்பு செய்தபோது ரத்து செய்யப்பட்டுவிட்டது என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் கூடுதலாக தாக்கல் செய்யப்பட்டுள்ள வீட்டுவரி ரசீது, குடிநீர் வரி ரசீதுகள் ஆகியை வேறு ஒரு இடத்திற்கான ரசீதுகள்

என்றும் இந்த வழக்கிற் சம்மந்தமில்லாத ஆவணம் என்றால் சரியல்ல. எனக்கு கொடுக்கப்பட்ட மனைவாரி பட்டா ரத்து செய்யப்பட்டு வேறு ஒரு பயனாளிக்கு கொடுக்கபட்டுவிட்டது என்றும் எனவே இந்தபட்டாவை பொறுத்து எந்தஒரு உரிமையும் கோரமுடியாது என்றால் சரியல்ல.